2017 ஜூன் 28] [திரு. கே.சி. வீரமணி]

குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, இந்தத் துறைக்கான மானியக் கோரிக்கை விவாதத்தின்போது விவரமாக பதிலளிக்க இருக்கின்றோம். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுதான் நிலுவையிலுள்ள ஆவணங்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்ற நிலை. இதற்கென பிரிவு 47A–ல் நடைமுறையில் உள்ளது. இந்தச் சட்டப் பிரிவின்படி, மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற பிறகுதான் பிரிவு 47A–ன்கீழ் நிலுவையிலுள்ள ஆவணங்களை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இது அரசாணை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பத்திரப் பதிவுத் துறையிலே பல்வேறு ஆக்கப்பூர்வமான புதிய திட்டங்களை அறிவித்து, 33 சதவிகிதத்தைக் குறைத்திருக்கிறார்கள். பல்வேறு அரசியல் கட்சிகளினுடைய கோரிக்கை, எதிர்க்கட்சிகளினுடைய கோரிக்கை, மக்களுடைய கோரிக்கை, எங்களுடைய கோரிக்கை இவையெல்லாவற்றையும் ஏற்று, தமிழக முதல்வர் இன்றைக்கு நல்ல ஓர் அறிவிப்பை இங்கே வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரப் பதிவுத் துறையிலே கண்டிப்பாக முன்பிருந்த நிலைமை தொடரும். இதன் தொடர்ச்சியாக அரசுக்கு, 10 ஆயிரம் கோடி, 11 ஆயிரம் கோடி, 12 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்லக்கூடிய அளவிற்கு வருவாய் ஈட்டக்கூடிய அளவிலே கண்டிப்பாக பத்திரப் பதிவுத் துறை அமையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) ஜி.எஸ்.டி. வரி உயர்வால் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலை பாதிக்கப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், என்னவென்று சொல்லுங்கள்.*

[2017 ஜூன் 28

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு விஷயத்தை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். விருதுநகர் மாவட்டத்திலே இப்பொழுது ஒரு பதற்றமான சூழ்நிலை இருக்கிறது. பட்டாசும், தீப்பெட்டியும் தான் விருதுநகரில் இருக்கின்ற மிக முக்கியமான, ஆதாரமான தொழில். இந்த இரண்டு தொழில்களுக்கும் இன்றைக்கு ஆபத்து வரக்கூடிய அளவிற்கு GST வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. தமிழக அரசு முயற்சி எடுத்தும், அந்த முயற்சி முற்றுப்பெறாத ஒரு காரியமாக இருக்கின்றது. இதுவரை 12½ சதவிகித வரியை மட்டுமே நம்முடைய தமிழ்நாடு அரசுக்கு பட்டாசு நிறுவனங்கள் கட்டிக் கொண்டிருந்தன. ஆனால், இன்றைக்கு அதனை 28 சதவிகிதமாக உயர்த்தியிருக்கின்றார்கள். அப்படி உயர்த்தியிருப்பதன் விளைவாக விலைவாசி அதிகமாகக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிறது. ஏற்கெனவே சீனப் பட்டாசுகள் வந்து, பட்டாசு விற்பனையானது, சிரமத்தில் இருக்கின்ற நேரத்தில், இப்போது 28 சதவிகிதமாக GST வரி வரும் என்று சொன்னால், அவர்கள் தொழிலை நடத்துவதற்கு சிரமம் இருக்கும். சபாநாயகர் அவர்களே, பொதுவாக, வேலைக்கு ஆட்கள் வேண்டும் என்று கேட்கக்கூடிய மாவட்டம், எங்களுடைய மாவட்டம்தான். படிப்பறிவு இல்லாதவர்கள், குறைந்த அளவில் படித்திருப்பவர்கள் ஆகியோர் வேலை செய்யக்கூடிய இடங்கள் ஒன்று பட்டாசு தொழிற்சாலை, இல்லையென்றால் தீப்பெட்டி தொழிற்சாலைதான். நான் எனக்காக மட்டும் பேசவில்லை. 4 சட்டமன்ற உறுப்பினர்கள் உங்களிடம் கையெழுத்து போட்டுக் கொடுத்திருக்கின்றோம். இங்கே அமர்ந்திருக்கக்கூடிய எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் ராஜேந்திர பாலாஜி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் கடம்பூர் ராஜு அவர்கள், சென்ற முறை சாத்தூரில் தேர்தலில் நின்ற வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஆகிய எல்லோரும் இதில் சம்பந்தப்பட்டவர்கள்தான். அதேபோல, சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எல்லோருக்கும் சேர்த்துதான் நான் பேசுகிறேன். அவர்கள் ஆளும் கட்சியில் இருப்பதால், பேச முடியாது. அதனால் நான் பேசுகின்றேன். எல்லோருக்கும் ஒரு பதற்றமான சூழ்நிலை இருக்கின்றது. முதலாளிகள் தொழிற்சாலையை மூடுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அவர்களை நம்பி சுமார் 10 இலட்சம் பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய

2017 ஜூன் 28] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

வேலைக்கு ஆபத்து வருகின்றது. ஆகவே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசு சார்பாக இது குறித்து மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இதுவரை 14½ சதவிகிதம் மாநில அரசுக்கு மட்டும் செலுத்திக்கொண்டிருந்தார்கள். அது நம்முடைய அரசாங்கம். இப்போது 28 சதவிகிதம் வரி என்று வரும்போது என்ன ஆகிறது என்று சொன்னால், அந்தப் பொருட்களை நாம் எங்கெங்கு விற்கின்றோமோ, அந்த மாநிலங்களுக்கும் வரி கிடைக்கின்றது. அதனால், மற்ற மாநிலங்களுக்கு வருவாய் கிடைக்கும் என்பதால், அவர்கள் மத்திய அரசைக் கேட்பதற்கு நம்முடன் சேர மாட்டேன் என்கிறார்கள். இதுவரை உற்பத்தி வரி, தமிழ்நாடு அரசாங்கத்திற்கு மட்டும் கிடைத்தது. இனிமேல் GST வரி 28 சதவிகிதம் என்று வரும்போது, எங்கே கொண்டு சென்று நாம் விற்க இருக்கின்றோமோ, அந்த மாநில அரசுக்குக் கிடைக்கின்றது. அதனால் அவர்கள் நம்முடன் சேருவதற்குத் தயாராக இல்லை. தமிழ்நாடு அரசாங்கம் மட்டும்தான் இதற்கு தனியாகப் போராட வேண்டியிருக்கும். போராடி, நீங்கள் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, தீப்பெட்டிக்கு இதுவரை 6 சதவிகித tax–தான் கட்டிக் கொண்டிருந்தார்கள். இப்போது அதனை 12 விழுக்காடாக, 18 விழுக்காடாக உயர்த்தி இருக்கின்றார்கள். முறைப்படி 6 சதவிகிதத்திற்கு வந்தால்தான் தீப்பெட்டி தொழிலும் நடைபெறும். படிக்காதவர்கள், பாமரர்கள், இன்னும் சொல்லப்போனால் நிறைய பெண்கள்தான் வேலை செய்கிறார்கள். இவர்களுடைய வாழ்வாதாரத்தைத் காப்பாற்றக்கூடிய அந்த முயற்சியை தமிழ்நாடு அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, வாழ்வாதாரமாக இருப்பது தீப்பெட்டி தொழிற்சாலை மற்றும் பட்டாசு தொழிற்சாலை. இந்தத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிற ஏறக்குறைய 10 இலட்சம் பேர்களுடைய வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிடக் கூடாது என்ற அடிப்படையிலேதான்*

[திரு. டி. ஜெயக்குமார்] [2017 ஜூன் 28

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையைப் பெற்று, ஆலோசனைகளைப் பெற்று இதற்கு முழுமையான அளவிற்கு வரிக் குறைப்பு செய்ய வேண்டும், 10 இலட்சம் நபர்களுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற வகையிலே, அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், இன்னும் ஒரு முக்கியமான கருத்தாக, பட்டாசுக்கு வரி விதிப்பு 28 சதவிகிதமாக இருந்தால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட imported சீனப் பட்டாசுகளால் முற்றிலுமாக நம்முடைய தொழில் அழிந்துவிடக்கூடிய ஒரு நிலைமை உருவாகும் என்ற அந்தக் கவலையும் தெரிவிக்கப்பட்டது. அதையும் மத்திய அரசு குறித்துக் கொண்டது. GST council–னுடைய தலைவராக இருக்கின்ற மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. அருண் ஜெட்லி அவர்கள் கூட ஜூலை ஒன்றாம் தேதிக்குப் பிறகு எந்தெந்தப் பொருட்களுக்கு நாம் வரியை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்பது குறித்த கருத்துகளெல்லாம் மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி நம்முடைய 10 இலட்சம் தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுகின்ற வகையிலே அழுத்தம், மிகுந்த அழுத்தம் மத்திய அரசுக்கு நிச்சயமாகக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–55

மேலும், G.S.T. என்பது ஒரு Council. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 101–வது திருத்தத்தின்படி அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு Council. எதிர்காலத்தில் மாநில அரசுக்கோ, மத்திய அரசுக்கோ வரி விதிக்கின்ற அதிகாரம் கிடையாது. வரி விதிக்கின்ற அதிகாரம் பெற்ற அமைப்பு என்று சொன்னால், அது G.S.T. Council மட்டும்தான். வரியை மறு ஆய்வு செய்யும் அதிகாரமும்கூட அந்த Council–க்குத்தான் உள்ளது. Council என்பது எல்லா மாநில நிதியமைச்சர்களையும் கொண்ட ஓர் அமைப்பாகும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நாம் தெளிவாக உள்ளோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நாம் வலியுறுத்துகின்றோம். அதேபோன்று, சம்பந்தப்பட்ட நம்முடைய சங்கங்கள் மற்ற மாநில நிதியமைச்சர்களையும் சந்தித்து அவர்களுடைய கருத்துகளையும் சொன்னால், நாங்கள்

2017 ஜூன் 28] [திரு. டி. ஜெயக்குமார்]

அந்தக் கருத்துகளை எடுத்து வைக்கும்போது, அவர்களும் அதற்கு ஆதரவு தருகின்ற நிலையிலே, நிச்சயமாக நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு நல்ல ஒரு முடிவு எட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

(இ) கீழ்வேளூர் தொகுதி, அக்கரைப்பேட்டை மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மதிவாணன், என்ன? தகவல் கோரலுக்கு முன்னரே கேட்க வேண்டுமென்றால், நேரம் இருக்க வேண்டுமல்லவா? (குறுக்கீடு) கேளுங்கள், கேளுங்கள்.*

***திரு. உ. மதிவாணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23 ஆம் தேதி இரவு என்னுடைய கீழ்வேளூர் தொகுதி, அக்கரைப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த 8 மீனவர்களும், அவர்கள் மீன் பிடிக்க எடுத்துச் சென்ற விசைப் படகுகளும் இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு, 8 மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் மாத்திரம் 2015-லிருந்து இதுவரையில் 25 விசைப் படகுகள் அங்கே சிக்கியிருக்கின்றன. 5 நாட்டுப் படகுகள் அங்கே சிக்கியிருக்கின்றன. மீனவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற ஒரு நிரந்தரத் தீர்வை இந்த அரசு காண வேண்டும். மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அங்கே கைதாகியிருக்கிற அந்த மீனவர்களை மீட்டெடுப்பதோடு, அவர்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய அந்த விசைப் படகுகளையும் மீட்டுத் தருவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. சாமி, நீங்களும் கேட்டிருக்கிறீர்கள். அதை நான்* record *செய்துவிட்டேன். (குறுக்கீடு) நீங்களும் கேட்டிருக்கிறீர்கள். அதையும் நான்* record *செய்துவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இதே பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர், பேசுங்கள். (குறுக்கீடுகள்)*